

சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், நேற்று கழகத் தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களை, மனிதநேய ஜனநாயகக் கட்சியின் தலைவர் மு. தமிமுன் அன்சாரி, மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடினார். இச்சந்திப்பில் ம.ஜ.க. சார்பில் அக்கட்சியின் பொருளாளர் கேப்டன் சையது முகம்மது பாரூக், துணைத் தலைவர் ஜெ.எஸ்.ரிபாயி, இணைப் பொதுச்செயலாளர் நாச்சிகுளம் தாஜுதீன், தலைமை ஒருங்கிணைப்பாளர் தஞ்சை அகமது கபீர் ஆகியோர் பங்கேற்றனர். இந்நிகழ்வின் போது – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., க.பொன்முடி, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழகச் செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.



சென்னை – நீலாங்கரையில் நேற்று (26-10-2026), நடைபெற்ற டாக்டர் பழனி ஜி. பெரியசாமி மற்றும் டாக்டர் ரவி பச்சமுத்து ஆகியோரது இல்லத் திருமண விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, மணமக்கள் விக்ரம் பெரியசாமி குமார் – ஹரிணி ரவி ஆகியோரை வாழ்த்தினார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முன்னாள் அமைச்சர் க.பொன்முடி உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைதுக்கு கண்டனம்!

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கொஞ்சம் கூட கிடையாது!

காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் குற்றச்சாட்டு!

வேலூர், அக். 27-

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கொஞ்சம் கூட கிடையாது என காட்பாடியில் கழகப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறினார்.

வேலூர் மாவட்டம், காட்பாடி காந்திநகரில் உள்ள தனது இல்லத்தில் தி.மு.க., பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் நேற்று நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை கைது செய்தது கடும் கண்டனத்திற்குரியது.

பருவமழை தொடர்பாக த.வெ.க அரசு எவ்வளவு பாதுகாப்பு செய்திருந்தாலும் கட்டுக்கடங்காத மழை வந்தால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அதனைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு நிர்வாகத்தை செய்ய வேண்டும். அதுதான் முறை. இந்த ஆட்சியில் அனைத்துமே மறைமுகமாக உள்ளது. எதுவுமே வெளிப்படைத் தன்மையோடு இல்லை. இது ஒரு மர்மமான அரசாங்கமாக உள்ளது.

சட்டம் ஒழுங்கு கொஞ்சம் கூட கிடையாது. காரணம் போலீசாரிடம் சரியான அணுகுமுறை உள்ளதா எனத் தெரியவில்லை. ஆளும் கட்சியினர் தான் அதிக போதைப்பொருள் வைத்திருப்பதாக பத்திரிகைகளில் பார்க்கிறோம். ஆளும் கட்சிக்கு கொஞ்சம், கொஞ்சமாக பயம் விட்டு போய்விட்டது. நாம் தான் ஆளும் கட்சி. நம்மை ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். அதனுடைய விளைவு, சட்டம் ஒழுங்கு கெட்டுப் போய் விட்டது அதைப் பற்றி இவர்கள் கவலைப் படவில்லை.



புதிய அரசு ஆட்சிக்கு வந்த பிறகு தான் சென்னையில் மழை வெள்ளம் விரைவாக வடிகிறது. அதற்கு நாங்கள் எடுத்த நடவடிக்கையே காரணம் என அமைச்சர்கள் கூறுகிறார் கள்.

இவர்கள் ஒரு மண்வெட்டி மண்ணைக் கூட எடுக்கவில்லை. இன்றைக்கு சென்னையில் ஓரளவுக்கு வெள்ளம் வடிந்துள்ளது என்றால் அது நாங்கள் செய்து விட்டுப் போன பணிகளால் தான். இவர்களை தைரியமாக சொல்லச் சொல்லுங்கள் இத்தனை கால்வாய்களைக் கட்டியுள்ளோம். இவ்வளவு தூரம் தூர்வாரி உள்ளோம் என.

அடிக்கடி டெண்டரை கேன்சல் செய்கிறார்கள். டெண்டர் வைத்த பணிகள் நடக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து ஆய்வு செய்து முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு உடனே டெண்டர் ரத்து என்பது இவர்கள் டெண்டர் விட்டு பணம் வாங்குவதற்கான நடவடிக்கையே ஆகும். இவர்களால் புதிதாக ஒரு வேலையைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. அதில் டெண்டர் வைக்க முடியவில்லை.

தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். உள்நுழையக் காரணம் தி.மு.க. தான் என த.வெ.க., காங்கிரசும் குற்றம் சொல்கிறது. காங்கிரஸ் எல்லாம் ஒரு கட்சியே கிடையாது. பாவம் அது செத்துப் போன கட்சி. அதைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்.

எஸ்.ஐ.ஆரை ஆரம்பத்தில் இருந்து எதிர்த்தது நாங்கள்தான். அன்றைக்கு எல்லாம் இவர்கள் எதிர்க்க வில்லை. ஒன்றும் இல்லை. காங்கிரஸ் எல்லாம் நமத்துப் போன சமாச்சாரம். அந்தக் கட்சியை பேசாமல் இருப்பதே நல்லது. இந்த ஜென்மத்தில் ஆட்சிக்கு வராது.

தமிழ்நாட்டில் அரிசிக்கு இப்படி ஒரு பஞ்சம் வந்ததை நான் கேள்விப்படவில்லை. மின்சாரம், அரிசி, சட்டம் ஒழுங்கு எதையாவது ஒன்றில் இவர்கள் உருப்படியாக எதையாவது செய்துள்ளார்களா? இவர்கள் விளங்காதவர்கள்.

தி.மு.க கூட்டணியில் இருந்து தற்போது த.வெ.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மீண்டும் தி.மு.க. கூட்டணிக்கு வர வாய்ப்புள்ளதா எனக் கேட்கிறீர்கள்

எந்தக் கட்சியில் எப்போது சேர்வார்கள் என்று சொல்லிவிட முடியாது. சீட்டு கொடுத்தால் போவார்கள். இல்லை என்றால் இங்கே வருவார்கள். தார்மீக அதரவு, கொள்கை, லட்சியம் என்பதெல்லாம் இப்பொழுது கிடையாது. சீட்டு தான் இப்போது லட்சியம். யார் எங்கு வருவார்கள் எனச் சொல்ல முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

சிங்கப்பூர் லீ குவான் யூ பொதுக் கொள்கைப் பள்ளியின் 'பெண்கள் மற்றும் தலைமைத்துவம்' பயிலரங்கில் பங்கேற்க

முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிங்கப்பூர் பயணம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, அக். 27 - தென்சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், சிங்கப்பூரில் உள்ள தேசியப் பல்கலைக்கழகத்தின் *(National University of Singapore)* அங்கமாகச் செயல்படும், பொதுக் கொள்கைக் கல்வியில் உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான லீ குவான் யூ பொதுக் கொள்கைப் பள்ளியில் *(Lee Kuan Yew School of Public Policy)* நடைபெறவுள்ள 'பெண்கள் மற்றும் தலைமைத்துவம்' *(Women and Leadership)* பயிலரங்கில் பங்கேற்கச் சிங்கப்பூர் சென்றார்.

இதனையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

சிங்கப்பூர் குடியரசின் சென்னையிலுள்ள துணைத் தூதரகம் *(Consulate General of the Republic of Singapore)*, இப்பயிலரங்கில் பங்கேற்க டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. பொதுக் கொள்கை, ஆளுகை மற்றும் தலைமைத்துவத் துறைகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்தப் பயிலரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெண் தலைவர்களின் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதோடு, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் தலைவர்கள் தங்களது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்துகொள்வதற்கான சர்வதேசத் தளமாகவும் இப்பயிலரங்கு அமைகிறது. ஆளுகை சார்ந்த பொதுவான சவால்கள், பெண்களின் தலைமைத்துவ வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான கூட்டு முயற்சிகள் குறித்து இதில் கலந்துரையாடப்பட உள்ளது.



இப்பயிலரங்கில் பங்கேற்கச் சிங்கப்பூர் செல்வதற்கு முன்னதாக, சென்னையில் உள்ள சிங்கப்பூர் குடியரசின் துணைத் தூதர் வில்லியம் சிக் *(Mr William Chik)* அவர்களை முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் சந்தித்தார்.

இப்பயிலரங்கில் பங்கேற்கத் தமக்கு அழைப்பு விடுத்தமைக்காகவும், ஆதரவளித்தமைக்காகவும் துணைத் தூதரகத்திற்கு அவர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் தலைவர்களுடன் கலந்துரையாடும் இந்த வாய்ப்பில் பங்கேற்பதில் தமக்குள்ள ஆர்வத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.

இப்பயிலரங்கின் முக்கியத்துவம் குறித்து முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் கூறுகையில்,

"வெவ்வேறு நாடுகளையும், பல்வேறு பின்னணிகளையும் சேர்ந்த பெண் தலைவர்கள் ஒரே தளத்தில் சந்திப்பது, எல்லைகளைக் கடந்த சிந்தனைகளையும் கருத்துப் பரிமாற்றங்களையும் முன்னெடுப்பதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில் துறையைச் சேர்ந்த தலைவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஒன்றிணையும்போது, பெண்கள் எதிர்கொள்ளும் பொதுவான சவால்களுக்குத் தீர்வு காணவும், கல்வி, திறன் மேம்பாடு, பொருளாதாரப் பங்கேற்பு ஆகிய துறைகளில் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளவும், பாலினச் சமத்துவத்தை முன்னெடுப்பதற்கான கூட்டு முயற்சிகளை உருவாக்கவும் முடியும்.

தமிழ்நாட்டு மேனாள் முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமூகநீதிக்கு தமிழ்நாடு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. தமிழ் நாட்டின் அனுபவங்களை இந்தச் சர்வதேசத் தளத்தில் பகிர்ந்துகொள்வதோடு, தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பெண் தலைவர்களின் அனுபவங்களிலிருந்தும் கற்றுக் கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்றார்.

தென் சென்னை மக்களவைத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பெண்களின் தலைமைத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய ஆளுகை மற்றும் சமூக மேம்பாடு குறித்த தமிழ் நாட்டின் அனுபவங்களையும் பார்வைகளையும் சர்வதேச அரங்கில் பகிர்ந்துகொள்வதற்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் நன்றியுடன் வரவேற்றுள்ளார்.

இந்தப் பங்கேற்பு இந்தியா - சிங்கப்பூர் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்தவும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் தலைவர்களிடையே நீடித்த தொடர்புகளை உருவாக்கவும் உதவும். மேலும், கல்வி, திறன் மேம்பாடு, பொருளாதார வாய்ப்புகள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் ஆகியவை அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குவதில் வகிக்கும் பங்கு குறித்த ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றங்களுக்கும் இப்பயிலரங்கு வழிவகுக்கும்.

த.வெ.க. ஆட்சியில் வீட்டிலும் பாதுகாப்பில்லை – வெளியிலும் பாதுகாப்பில்லை;

மொத்தத்தில் தமிழ்நாடுக்கே 'திக்திக்' நிமிடங்கள்தான்!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டி!

சென்னை, அக். 27-

த.வெ.க. ஆட்சியில் வீட்டிலும் பாதுகாப்பில்லை, வெளியிலும் பாதுகாப்பில்லை; மொத்தத்தில் தமிழ்நாடுக்கே திக்திக் நிமிடங்கள்தான் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கூறியுள் ளார்.

தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., நேற்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

இன்றைக்கு வரக்கூடிய செய்தியில், எண்ணூர் தாழங்குப்பத்தில் இரண்டரை வயது குழந்தை த.வெ.க. நிர்வாகியால் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். அந்த செய்தி வெளியிலேயே வராமல் மூடி மறைக்க பக்கத்தில் இருக்கக்கூடிய அத்தனை பேரையும் அரசு விரட்டி இருக்கிறது. அந்த குழந்தைக்கு இதுவரைக்கும் ரெண்டு சர்ஜரீஸ் நடந்துள்ளது. அந்த அளவுக்கு மோசமாக அந்த குழந்தை பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் த.வெ.க. நிர்வாகி இதில் குற்றவாளியாக இருப்பதால் அவரை காப்பாற்றுவதில்தான் அரசு முனைப்பாக இருக்கிறது.

செஞ்சியில் பெண் குழந்தை காணாமல் போய்விட்டது!

அதுமட்டுமில்லாமல் செஞ்சியில் கிட்டத்தட்ட 15 நாட்களாக ஒரு பெண் குழந்தை காணாமல் போய்யுள்ளது. இன்னைக்கு வரைக்கும் த.வெ.க. அரசால் அந்த குழந்தைக்கு கிடைக்க வேண்டிய நியாயம், அந்த குழந்தையை கண்டுபிடிப்பதற்கான எந்த முயற்சியும் சரியாக எடுக்கப்படவில்லை. அதே போல் ராணிப்பேட்டையில் ஒரு வயது குழந்தை காணாமல் போய் இது வரைக்கும் அந்த குழந்தைக்கு என்ன ஆனது என யாருக்கும் தெரியாத ஒரு சூழல் இருக்கிறது.

அதைத்தாண்டி சில நாட்களுக்கு முன்னால் இடைத்தேர்தல் நடந்து முடிந்த மதுராந்தகத்தில் சிறுநாகலூர் பகுதியில் ஒரு பெண் கழுத்தை அறுத்து கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் சடலமாக மீட்கப்பட்டார். அதுமட்டுமில்லாமல் திருண்ணாமலை பகுதியில் 12 வயது சிறுவன் காணாமல் போய் சடலமாக மீட்கப்பட்டு இருக்கிறார்.



தூத்துக்குடியில் ஒரு குடும்பத்தில் இருக்கக்கூடியவர்களை, அந்த பெண்களை தூக்கி போவதற்காக, அந்த வீட்டுக்குள் புகுந்து அங்க இருக்கக்கூடிய தாயை வெட்டி கொலை செய்துவிட்டு, தகப்பனை தாக்கிவிட்டு 10 வயது சிறுவனையும் மிக மோசமாக தாக்கியதில் உயிருக்கே போராடக்கூடிய ஒரு நிலைக்கு ஏற்பட்டுள்ளது. செஞ்சியில் என்ன நடக்கிறது என்பது இதுவரைக்கும் யாருக்குமே தெரியவில்லை. த.வெ.க. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து பல கொலை சம்பவங்கள், குற்ற சம்பவங்கள், பாலியல் வன்முறைகள் த.வெ.க. நிர்வாகிகள் தான் நேரடியாக ஈடுபட்டுள்ளனர்.

தவெக ஆட்சி தரும் பாதுகாப்பு தங்களுக்கானது என்ற திமிரில், எந்தக் குற்றத்தைச் செய்தாலும் இந்தத் ஆட்சி தங்களைக் காப்பாற்றிவிடும் என்ற துணிச்சலில், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைக்கூடச் செய்யத் தயங்காமல் தொடர்ந்து குற்றச் செயல்களில் த.வெ.க. கட்சியினர் ஈடுபடுகிறார்கள். சட்டத்தின் மீதான பயம் போய், ஆட்சியின் மீதான நம்பிக்கையில் குற்றம் செய்யும் அளவுக்கு அவர்களின் தெனாவட்டு அதிகரிக்க செய்துள்ளது. இந்த ஆட்சியில் இருக்கக்கூடியவர்கள் குற்றவாளிகளை காப்பாற்றுவதில் காட்டக்கூடிய முக்கியத்துவத்தையும், கவனத்தையும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடியவர்களை மீட்பதற்கோ, அவர்களை பாதுகாப்பதற்கும் காட்டவில்லை என்பதுதான் முக்கியமானது.

முதல்வர் விஜய், ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாகப் பல கேள்விகளை எழுப்பினார். இது நாடா, காடா என்று கேட்டு, நான் ஆட்சிக்கு வந்தால் அனைத்தையும் மாற்றுவதாகவும் பேசினார். ஆனால், இன்று அவர் ஆட்சியில் இருக்கும்போதே, அதே கேள்வியை எங்களுடைய தலைவர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் நேற்று திருப்பிக் கேட்க வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது. முன்னதாக நீங்கள்தான் கேட்டீர்கள், இது நாடா, காடா என்று. இன்று நாங்கள் உங்களைப் பார்த்துக் கேட்கிறோம், இது நாடா, காடா.

குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்!

அதேபோல் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய அரசு, அதற்கான பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். தாய்மாமன் திட்டம் என்று அறிவிப்புகளை வெளியிடுகிறார்கள். ஆனால், தாய்மாமனாக குழந்தைகளை காக்க வேண்டிய முதல்வர் எங்கே இருக்கிறார். அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா, அல்லது மக்களின் பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருக்கிறாரா என்ற கேள்விதான் எழுகிறது.

ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் இனியாவது தங்களுடைய கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். அரசியல் விளம்பரங்களும் அறிவிப்புகளும் மக்களுக்குப் பாதுகாப்பாகிவிடாது. குறிப்பாக, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். முதல்வருக்கு மனசாட்சி இருந்தால், குறைந்தபட்சம் குழந்தைகளை யாவது பாதுகாக்க முன்வாருங்கள்.

த.வெ.க. ஆட்சியில் தி.மு.க.விற்கு திக்திக் நிமிடங்கள் இல்லை, தமிழ்நாடுக்கே திக்திக் நிமிடங்கள்தான். வீட்டில் இருந்தாலும் ஆபத்து, வெளியில் போனாலும் ஆபத்து, எங்கயுமே பாதுகாப்பாக இருக்க முடியாது. நீங்களே கூட பயந்துதான் வெளியில போறீங்கனு நினைக்கிறேன். அந்த அளவுக்கு தமிழ்நாடேதிக்திக் நிமிடங்களில்தான் இருக்கிறது.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

'டம்மி' முதலமைச்சரின் ஆசியோடுதான் 'ரவுடிகள் ராஜ்யம்' நடக்கிறதா?

த.வெ.க.வினரும் தங்களது Crime Quota-வை விட்டுக் கொடுப்பதில்லை!

சட்டம் ஒழுங்கை காப்பாற்ற ஒரே ஒரு ஆய்வுக் கூட்டத்தையாவது முதலமைச்சர் நடத்துவாரா?

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 27-

டம்மி முதலமைச்சரின் ஆசியோடு தான் ரவுடிகள் ராஜ்யம் நடக்கிறதா? என்றும், த.வெ.க.வினரும் தங்களது Crime Quotaவை விட்டுக்கொடுப்பதில்லை என்றும், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முதலமைச்சர் ஒரே ஒரு ஆய்வுக் கூட்டத்தையாவது நடத்துவாரா? என்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அமைதிப்பூங்காவாக இருந்த தமிழ்நாட்டில் மே 4க்குப்பிறகு சட்டம் ஒழுங்கு என்பது சாம்பிளுக்குக்கூட இல்லை என்பது மிகப்பெரிய வேதனை.

நாளிதழ்களில் இன்றைய கொலைப் பட்டியல் என்று தனி Column போடும் அளவுக்கு ஒவ்வொரு நாளும் கொலைகள் எல்லை மீறி நடக்கின்றன.

சமீபத்தில் மதுரை மேலூர் அருகே



மாயமான 7 வயது சிறுவன், உடலில் காயங்களோடு சடலமாக கண்டெடுக்கப் பட்டு இருக்கிறான்.

சேலத்தில் ரவுடி டேவிட் என்பவரை பட்டப்பகலில் ஒரு கும்பல் வெட்டிக்கொலைச் செய்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் பெண் ஒருவர் கொல்லப்பட்ட நிலையில், ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கல்லூரி மாணவனை வெட்டிக்கொலை செய்துள்ளனர்.

த.வெ.க.வினரும் தங்களது Crime Quotaவை விட்டுக்கொடுப்பதில்லை என்பதற்கு சாட்சியாக,

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த த.வெ.க. பெண் நிர்வாகி ஒருவர், கணவனையே கொலைச் செய்துள்ளதாக கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள ஒரே தொகுதியில் 40 இடங்களுக்குப் போய் Tractor ஓட்டி, Tea குடித்து, முருங்கைப் பறித்த முதலமைச்சர், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற ஒரே ஒரு ஆய்வுக்கூட்டத்தையாவது நடத்துவாரா?

ஒருவேளை அத்தகைய கூட்டங்களை நடத்தி இருந்தால் இன்னும் கொலைகள் தொடர்வது ஏன்? Dummy முதலமைச்சரின் ஆசியோடு தான் தமிழ்நாட்டில் ரவுடிகள் ராஜ்ஜியம் நடக்கிறதா?

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.